கால் வாரிய அதிகாரிகளை அழைத்து இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நேரிடையாகவே சொல்லி இருக்கிறேன். இது குறித்து விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டம் சம்பந்தமாக பல மாவட்டங்களில் ஏராளமான பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. கோவையியிலேயும் அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அங்கே பல பஞ்சாயத்துகளுக்கு இந்தத் திட்டம் கொண்டு வருவதாக இருக்கின்றது. மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. வறட்சிப் பகுதியாதலால், தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக, அத்திக்கடவு திட்டத்தைச் செயலாக்கி, அந்தக் கோவை பகுதி மக்களுக்குக் குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து கோவைக்கு விமானத்தில் செல்ல வேண்டும் என்று சொன்னால் கூட, குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் ஆகும் என்று கருதுகிறேன். எனவே, திருச்சி சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்டால் பதில் அளிக்க முடியும்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ. அபிஷேகபுரம் பஞ்சாயத்து என்னுடைய தொகுதியில் அடங்கியிருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். கோ. அபிஷேகபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக இந்த ஆண்டு இரண்டு கோடியே, 37 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் போடப்பட்டு, நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அது வந்திருக்கிறது. இந்த ஆண்டு, அந்தத் திட்டம் விரைவில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனி வினா எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சி கிராமத்தில் துணை மின் நிலையம் விரிவுப்படுத்துதல்

186—*வினா எண். 39—**திரு. பெ. சு. திருவேங்கடம்** : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட **வினாக்களுக்கு** விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், காஞ்சி கிராமத்தில் **உள்ள** துணை மின் நிலையத்தை விரிவு படுத்துவதற்கான **செயற்குறிப்பு** அரசின் பரிசீலனையில்உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் **என்ன?**

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம் காஞ்சியில் இருக்கும் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை 110/11 கே.வி. துணை மின் நிலையமாக மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத் துணை மின் நிலையத்தில் 10 மெகா வோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகள் நிறுவப்பட உள்ளன. இதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் காஞ்சியிலே அந்தத் துணை மின் நிலையம் விரிவு படுத்தப்படவுள்ளதாக மாண்புமிகு அமைசர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எப்போது செயல்படுத்த அரசு முயற்சி எடுத்தது ? நிலம் ஆர்ஜிதப் படுத்துவதில் மிக மந்தமாக அந்த மின் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறதே, அதை விரைவு படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1987 ஆம் ஆண்டிலிருந்தே நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. 1987 ஆம் ஆண்டு தான் அறநிலையத்திற்குச் சொந்தமான அந்த நிலத்தை தருவதாக அதைச் சார்ந்த அதிகாரி சான்றிதழ் வழங்கியிருக்கிறார். இன்னும் நமது அரசாங்க நிலம் ஒரு 88 சென்ட் அதில் எடுக்க வேண்டியிருக்கிற காரணத்தால் அது தாமதப் பட்டுக் கொண்டு இருந்தது. விரைவாக நிலம் கையகப்படுத்தப்பட்டு, 1990 ஆம் ஆண்டிலேயே அதை ஆரம்பித்து, அந்த ஆண்டிலே முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் 1987-லே போடப்பட்டது, இன்று 1989. மின்சாரப் பற்றாக் குறையால், விவசாயிகள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு அறியும். ஆனாலும் ஏற்கெனவே கூட, ஒரு திட்டத்திற்கு நிலம் ஆர்ஜிதப்படுத்துவது தான் கால தாமதம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எல்லா இடங்களிலும் இது போன்று திட்டங்களை விரைவாகச் செயல் படுத்த இந்த மின் துறை இலாக்காவை மிக வேகமாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1989 மே 2]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : உறுப்பினர் அவர்களுடைய அவசரத்தைப் பற்றி எனக்கு நன்கு தெரிகிறது. கேட்க வேண்டியவர்களிடம் கேட்டு இருக்க வேண்டும், ஏன் இவ்வளவு தாமதம் என்று. வந்து மூன்று மாதம் தான் ஆகிறது. நிச்சயமாக உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மைய வேலைகள்

187—(*வினா எண் 445) திரு. மா: சுந்தரதாஸ், திரு. பொன். விஜயராகவன் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முடிவடைந்துவிட்டதா?

ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முழுவதுமாக இன்னும் முற்றுப்பெறவில்லை.

(ஆ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மூன்று பெரிய அங்காடிகளாகக் கட்டப்பட்டு வருகின்றது. பூக்கள், காய்கள், பழங்கள் அங்காடியும், துணி அங்காடியும், நவதானிய அங்காடியும் ஆக, மூன்று அங்காடிகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது அந்தப் பகுதியின் அடிப்படை வசதிகளைச் செய்கின்ற அளவில், குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, மின்சார வசதி, அனைத்தும் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. பூ மற்றும் காய்கறி அங்காடி 1990 ஆம் ஆண்டுக்குள் நிறைவு பெறும் திட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. துணி மற்றும் தானிய அங்காடி அதனுடைய திட்ட ஆரம்ப நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொத்த வணிக அங்காடி எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் துவக்கப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை, தனி வினா எழுப்பினால் விவரமாக இந்த அவைக்குத் தெரிவிக்கின்றேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகவே இந்தக் கட்டட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. கால